தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
8.6.2024 (சனிக்கிழமை)

புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு

# மினி மாரத்தான் போட்டி

## ஜிப்மர் சார்பில் நாளை நடக்கிறது

புதுச்சேரி, ஜூன்.8–

புதுச்சேரி ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

ஜிப்மரின் மருத்துவ சமூக பணியாளர்கள், சுகாதாரம் மற்றும் குடும்ப நல சேவைகள் துறை, புதுவை மாநில புகையிலை கட்டுப்பாட்டு பிரிவு ஆகியவை இணைந்து உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நாளை (ஞாயிற்றுக்கிழமை) மினி மாரத்தான் போட்டியை நடத்துகிறது.

இந்த ஆண்டிற்கான கருப்பொருளான 'புகையிலை தொழில் குறுக்கீட்டிலிருந்து குழந்தைகளை பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பான புகையிலை இல்லாத வாழ்க்கைக்கு சிறந்த எதிர்காலத்தை நோக்கி ஓடுங்கள்' என்ற முழக்கத்தை முன்னிலைப்படுத்துவதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மினி மாரத்தான் போட்டி ஜிப்மர் மைதானத்தில் இருந்து காலை 6 மணிக்கு தொடங்கி 7 கி.மீ. தூரம் பயணித்து கடற்கரை காந்தி சிலை அருகே நிறைவடையும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்
ஜூன் 8, 2024 சனிக்கிழமை

# ஜிப்மர் மருத்துவமனையில் மினி மாரத்தான் போட்டி

## நாளை நடக்கிறது

புதுச்சேரி, ஜூன் 8: புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை இயக்குனர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுச்சேரி கோரிமேடு ஜிப்மர் மருத்துவ சமூகப் பணியாளர்கள், சுகாதாரம் மற்றும் குடும்பநல சேவைகள் துறை மற்றும் புதுச்சேரி மாநில புகையிலை கட்டுப்பாட்டு பிரிவு இணைந்து உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வருகிற 9ம் தேதி (நாளை) மினி மாரத்தான் போட்டி நடத்த உள்ளது. இந்த ஆண்டிற்கான கருப்பொருளான புகையிலை தொழில் குறுக்கீட்டிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பான மற்றும் புகையிலை இல்லாத வாழ்க்கைக்கு சிறந்த எதிர்காலத்தை நோக்கி ஓடுங்கள் என்ற முழக்கத்தை முன்னிலைப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள், குறிப்பாக குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், புகையிலை பழக்கத்திலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த மினி மாரத்தான் போட்டி 9ம் தேதி காலை 6 மணிக்கு ஜிப்மர் மைதானத்தில் இருந்து தொடங்கி 7 கி.மீட்டர் தூரம் பயணித்து காந்தி சிலை ராக் பீச்சில் நிறைவடைகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.